**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**Field Work Centre**
**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016**
**Term Examination, November - 2016**

FWC

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | தமிழ் – I |
|---|---|---|

## பகுதி - I

**01)**

1) அ) இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், தன் நெஞ்சத்திடம் கூறியது. (3 புள்ளிகள்)

ஆ) நெஞ்சமே மனம் பொருந்தும் வண்ணம் உனது கருத்தை ஏற்றுக் கொண்டு உனது குறையைக் கேட்டு அதனைப் போக்குவாரைப் பெறுவாயாயின் உனது போராட்டம் மிகவும் பெருமைக்குரியதே என்று தோழியின் உதவியை வேண்டி நிற்பதன் மூலமும்

அவ்வாறு இல்லையாதலால் உனது போராட்டத்தால் எவ்வித பயனுமில்லை என்று கழிவிரக்கத்துடன் கூறித் தன்னைத் தானே தேற்றுவதன் மூலமும்

தலைவனின் உள்ளத்தின் தவிப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. (3 புள்ளிகள்)

இ) பெயல் நீர்க்கேற்ற பசுங்கலம் போல

உவமானம் - பெயல் நீர்க்கேற்ற பசுங்கலம்

உவமேயம் - தாங்காத ஆசை வெள்ளத்தில் நீந்திப் பெறமுடியாததைப் பெற விரும்பும் நெஞ்சம்.

உவமையுருபு - போல

பொதுத்தன்மை - முற்றாக அழிந்து விடுதல்

இங்கு நல்ல நீரை ஏற்றுத் தேக்கி வைக்கும் பச்சை மண்ணாலான பாத்திரம் கரைந்து அழிந்து விடுவது போல நிறைந்த ஆசைகளைத் தேக்கி வைத்துள்ள தலைவனின் நெஞ்சமும் அழிந்துவிடுகின்றது என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.

($1\,{}^{1}/_{2}$ புள்ளிகள்)

உயர்கோட்டு மகவுடை மந்தி போல

உவமானம் - உயர்கோட்டு மகவுடை மந்தி

உவமேயம் - தலைவனது எண்ணத்தை நிறைவேற்றும் தோழி

உவமையுருபு - போல

பொதுத்தன்மை - பற்றிப்பிடித்தல்

இங்கு குட்டியைத் தாங்கும் பெண் குரங்கு உவமையாகக் கூறப்படுவதன் மூலம் தலைவனது எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் தலைவி செயற்படவேண்டும் என்ற தலைவனது எதிர்பார்ப்பு உணர்த்தப்படுகிறது. ($1\,{}^{1}/_{2}$ புள்ளிகள்)

ஈ) அகம் பற்றிப் பாடுதல்

வரைவு கடாவுதல்

புணர்தல் ஒழுக்கம் (3 புள்ளிகள்)

2) அ) காலைக் கதிரவனின் வரவைக் கண்டதும் தாமரைகள் மலர்ந்த நிகழ்ச்சியைக் கம்பர் கூறுகின்றார். (3 புள்ளிகள்)

ஆ) மும்மூர்த்திகளாகவும், அம்மூவர்க்கும் முதன்மை உடையவனாகவும் அம் முதல்வனுக்கு மூலப் பொருளாகவும், ஒன்றாய், வேறாய், உடனாய் உயிர்களுடன் கலந்து நிற்றலால் உலகெலாமாகியும் விளங்குகின்ற சிவபெருமான் பிடித்த போர்வில்லை ஒடித்த வீரனாகிய இராமபிரான், இப்பரந்த நிலவுலகைக் காவல் செய்வதற்கு அறிகுறியாகச் சிறந்த முடி புனைகின்ற பேரழகைக் கண்டுகளிக்கலாம் என்னும் ஆசை கொண்ட பெண்களின் முகங்களைப் போல தாமரை மலர்கள் மலர்ந்தன. (3 புள்ளிகள்)

இ) பாவைமார் முகமென்ன முன்னம் மலர்ந்த பங்கய ராசியே
உவமானம் - பாவைமார் முகம்
உவமேயம் - தாமரை மலர்கள்
உவமையுருபு - என்ன
பொதுத்தன்மை - மலர்தல்
வழக்கமாகப் பெண்கள் முகத்திற்கு தாமரை மலரை உவமானமாகக் கூறுவதை மாற்றி பெண்கள் முகம் போலத் தாமரை மலர்கள் மலர்ந்தன என்று கூறப்படுவது விபரீத உவமையணியாகும். (3 புள்ளிகள்)

ஈ) சிறந்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் வில்லை ஒடித்தமையால் இராமன் மாபெரும் வீரனாவான் என்பதை தேவதேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகர் என்று குறிப்பிடுவதன் மூலம் இராமனின் வீரம் புலப்படுத்தப்படுகின்றது.
(3 புள்ளிகள்)

**02)** அ)

1) இறைவனின் மேலான பெருமைகளை ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். புலவர் இறைவனின் பெருமைகளைக் குறிப்பிட்டு, இறைவணக்கம் தெரிவித்து, பின்னர் இறைவனின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதோடு அவனது அருள் பெறாதோரின் துன்பநிலையையும் எடுத்துக் கூறுகின்றார். (4 புள்ளிகள்)

2) இறைவனின் இயல்புகள் செயல்கள் மூலம் பெருமைகளைக் கூறுதல்.
மானுட சமுதாயத்தை நோக்கி வினாக்கள் எழுப்புதல்.
அணிப்பயன்பாடு - உருவக அணி - புகழங்கி
உவமையணி - தேனாம் இனியமொழி (4 புள்ளிகள்)

3) இறைவனின் இயல்புகள் - அருளின் முதலோன் அன்புடையோன், அகிலம் புரக்கும் கோமான், உரவோன், செய்ய கருணைச் செழுஞ் சோதீ
இறைவனின் சிறப்புகள் - தன்னில் தானாம் நிலையுடையான், அன்னோன் ஆற்றல் ஆழத்தை அளந்தார் யாரே? அளப்பாரே (4 புள்ளிகள்)

4) எந்த ஒரு சமயத்தையும் சாராமல் பொதுமை நிலையில் நின்று ஆண்டவன் பற்றியும், அவரது செயல்கள், வல்லமைகள் பற்றியும் கூறப்படுவது சிறப்பான வெளிப்பாட்டு முறையாகும். (4 புள்ளிகள்)

ஆ)

1) கவிதைக்கு உயிருண்டு, வலிமையுண்டு, அது புத்துயிர் அளிப்பது
சமூக அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் வலிமை இன்னிசைக் கவிதைக்கு உண்டு.
நாட்டுப் பற்றும் ஒற்றுமையும் உண்டாக்கவல்லது.
உயிரற்றவருக்கும் உயிரளிக்கும் ஆற்றல் கவிதைக்கு உண்டு. அவ்வகையில் செஞ்சொற்கவிவாணர் இயற்றும் கவிதைகள் நாட்டுக்கு நன்மை பயக்கும் தன்மையுடையவை. (4 புள்ளிகள்)

2) தமிழ் மக்களுக்குப் புத்துயிரும் புதிய ஆற்றலும் தந்தமை, உலக மக்களோடு ஒப்பாக இருத்தி உயர்வளித்தமை, பழமையானவை
அதன் தொன்மை காரணமாக கற்றோருக்கு அன்றி மற்றோருக்குப் பயன்படாமை, அதாவது யாவராலும் எளிதில் பொருள் உணர்ந்து கொள்ள முடியாமை. (4 புள்ளிகள்)

3) யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இலகுவாக இன்னிசை நடையில் கவிபாடக்கூடியவருள் முதல்வர்
தமிழ்நாடு செய்த தவப்பயனாய் உதித்தார்
தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றினார். (4 புள்ளிகள்)

4) தர்க்க ரீதியானது, உயிரோட்டமானது, தெளிவான, உயர் செந்தமிழ் நடை ஆதாரத்துடன் கருத்துக்களை முன்வைக்கும் தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளை வினாக்களாக அழுத்திக்கூறும் தன்மை. (4 புள்ளிகள்)

## பகுதி - II

**03)** அ) ஒரு செயலைச் செய்யும்போது வலிமை என்று சொல்லப்படுவது அதனை முடிப்பவனுடைய மனத்தினது திண்மையாகும். அது தவிர்ந்த எல்லாம் அதற்குத் திண்மை என்று சொல்லப்படா என்று வினைத்திட்பத்தை வரையறுக்கின்றார் வள்ளுவர். இதனையே வினைத்திட்பம் என்ப..... என்ற குறள் மூலம் விளக்குகின்றார். (3 புள்ளிகள்)

ஆ) வினைத்திட்பத்தின் அருமை - சொல்லுதல் யார்க்கும்........
வினைத்திட்பத்தின் சிறப்பு - வீறெய்தி மாண்டார்.....
வினைத்திட்பத்தின் பயன் - எண்ணிய எண்ணி....... (9 புள்ளிகள்)

இ) வினைத்திட்பம் இல்லாதோரின் இழிவு
எனைத்திட்பம் எய்தியக் கண்ணும்........ (3 புள்ளிகள்)

ஈ) உருவு கண்டு...... என்ற குறளில் உவமையணி கையாளப்பட்டுள்ளது. தோற்றத்தில் சிறியவராக இருந்தாலும் செயலில் மிகத் திறமையானவராக இருப்பார் என்பதை விளக்குவதற்கு (5 புள்ளிகள்)

**04)** அ) 48 - 49 ஆவது பாடல்கள் (5 புள்ளிகள்)
ஆ) 46 - 47 ஆவது பாடல்கள் (5 புள்ளிகள்)
இ) 50 - 54 ஆவது பாடல்கள் (10 புள்ளிகள்)

**05)** அ) ஒருமைப்பாடு

- ரோஜா மலரின் தோற்றம், பெருமிதம் நம்பிக்கை
- மனிதனது எண்ணங்கள் உட்பட எதுவுமே நிலையற்றது.
- வள்ளலாயினும் உலோபியாயினும் ஈற்றில் மண்ணாவதே உலக இயல்பு
- உதாரணம் காட்டி விளக்கப்படுதல் “பாலை மணலில் பனிபோல”
- ஒப்பீடு செய்து விளக்கப்படுதல்
  வள்ளல் - உலோபி (6 புள்ளிகள்)

ஆ) வேறுபாடு
கவிமணி - தமிழ்க் கவிதைப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டது, பாரதப் பண்பாடு, எளிமை
யோகியார் - தமிழ்க் கவிதை மரபைவிடச் சமயப் பண்பாட்டுக்குக் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கடினமொழி
அப்துல்காதர்லெப்பை - ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபை அடியொற்றியதாகவும் இஸ்லாமியப் பாரம்பரியத்திற்கு முன்னுரிமை கொடுப்பதாகவும் அமைந்துள்ளது தர்க்க ரீதியானது. (6 புள்ளிகள்)

இ) உலக வாழ்வு நிலையாமை
ரோஜா மலர் - மனிதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது. (4 புள்ளிகள்)

ஈ) மொழி ஆளுகை
கவிமணி - எளிமை
யோகியார் - கடினம்
அப்துல்காதர்லெப்பை - இடைப்பட்டது. (4 புள்ளிகள்)

**06)** அ)

- ✶ புத்தம் புதிய கலைகள் வளருது மேற்கே என்ற பாரதி கூற்று பிற்காலத்தில் கலைச் சொல்லாக்கம் வளர வழி வகுத்தமை
- ✶ சதுரகராதி, மலபார் அகராதி என்பவற்றின் பின் 1841 இல் உறோற்லர் என்பவர் அரசினர் உதவியுடன் தமிழ் - ஆங்கில அகராதியை வெளியிட்டமை.
- ✶ கிறீன் போன்றவர்களின் வழிகாட்டலின் பின்பும் தமிழ் நாட்டிலே இப்பணிகள் பெரிதும் முன்னெடுக்கப்படவில்லை.
- ✶ ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து பெருந்தொகையான அகராதிகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (7 புள்ளிகள்)

ஆ)

- ✶ கிறீன் வட்டுக்கோட்டை செமினரிக்கு அண்மையிலுள்ள மருத்துவ நிலையத்தின் தலைவராக இருந்து பணியாற்றியது
- ✶ மாணவருக்கு மருத்துவர் கல்வியைப் புகட்டியமை
- ✶ தமிழ் மொழியில் மருத்துவக் கல்வியைக் கற்பித்தமை
- ✶ மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தமை. (7 புள்ளிகள்)

இ) ✶ வண. எஸ். ஸ்போல்டிங் யாழ்ப்பாண அகராதியை வெளியிட்டமை.
✶ வண. எம். வின்சிலோ 1862 இல் தமிழ்ப் பண்டிதர், வித்துவான்களின் துணையுடன் தமிழ் - ஆங்கில அகராதியை வெளியிட்டமை.
✶ மிஷனறி மாணவரால் தொடக்கப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் நிறைவேற்றப்பட்டதே மதுரைத் தமிழ்ச் சங்க அகராதி (6 புள்ளிகள்)

**07)** அ) ✶ உணர்வும் உயிர்ப்பும் மிக்க பதினொரு வயதுச் சிறுமி
✶ உறவினர், நண்பருடனான நெருக்கம்
✶ வசதியான வாழ்க்கை கிடைக்கப் போகிறது என்னும் போது நிறைய எதிர்பார்ப்புகள்
✶ உரிமைகள் மறுக்கப்படும்போது உணர்வுகளைப் பூட்டி வைத்துக் குமுறுகின்ற உள்ளத்தை உடையவள் சுதந்திர உணர்வு (7 புள்ளிகள்)

ஆ) ✶ குடும்பப் பொறுப்புக் குறைந்தவன்
✶ தனது சந்தோசத்துக்காக மனைவியையும், மகளையும் துன்புறுத்துபவன்
✶ பிறரது உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யாதவன்
✶ தனது மனப்பாங்குகளைப் பிறருக்குக்காக மாற்றாதவன். (6 புள்ளிகள்)

இ) ✶ உயர்வர்க்கப் பிரதிநிதி
✶ பிறரை எள்ளுதல்
✶ தன்னைப் பற்றித் தானே பெருமை கொள்ளுதல்
✶ சந்தர்ப்பத்திற்கேற்பப் பேசவும் நடக்கவும் தெரிந்தவள் (7 புள்ளிகள்)

**08)** அ) ✶ நம்பிக்கையுணர்வு - எனினும் அந்தப்பாறை பிளந்து பயன் விளைவிப்பான்
✶ பெருமித உணர்வு - உள்ளம் நெகிழ்ந்தான் ஒரு கதிரைக் கொத்தாகக் கிள்ளி முகந்தான். கிறுகிறுத்துப் போனான்.
✶ வியப்புணர்வு - அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத எந்தச் சொல்லுண்டாம் எமக்கு
✶ அவலவுணர்வு - அங்கு மொய்த்து நின்ற பயிர பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய் விடவே கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து வெள்ளம் வயலை விழுங்கிற்று.
✶ வீரவுணர்வு - அதோபார் பழையபடி கிண்டுகின்றான். சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும் வானத்தைப் பார்த்து அயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்.

ஆ) ✶ மண்டனக்காயிர கோடி அண்டங்களுள் வாடும் என கந்தபுராணத்தில் சுக்கிராச்சாரியார் சூரபத்மனுக்கு பல்வேறு அண்டங்களைப் பற்றி விளக்குகையில் கூறியிருப்பதை எடுத்துக் காட்டலாம்.
✶ கர்ண பரம்பரைக் கதைகளின் படி மேகங்களிலிருந்து இறங்கிய நீண்டொடுங்கிய மஞ்சள் நிறத்தினர் மலைவாசிகளான ஐரோப்பியர்களால் கொல்லப்பட்டமை.
✶ பண்டைய இலக்கியங்களை மேற்கோளாகக் காட்டி, அவற்றில் குறிப்பிடப்படும் விமானங்களும் ஆயுதங்களும் உண்மையைத்தான் காட்டுகின்றன என வலியுறுத்தல்.

இ) ✶ அடக்குமுறைக்கு எதிராக அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
✶ சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல்
✶ மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகப் போராடுதல்
✶ அரசியல் பிரவேசம்
✶ அரசியல் உரிமைகளுக்காகப் போராடுதல்
✶ அரசியல் உரிமைகளைப் பெறுவதன் மூலம் மறுக்கப்பட்ட ஏனைய உரிமைகளுக்காகப் போராடுதல்
✶ சமூக மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டியமை

ஈ) திரியம்புரம் நீறாக்கிய செல்வன் தன் கழலை அரிய திரு மாலோடயன் தானும் அவரறியார்.
செல்லுற அரிய சிவன் ($10 \times 2 = 20$ புள்ளிகள்)

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
# Field Work Centre
## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016
## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | தமிழ் – II |
| --- | --- | --- |

பகுதி - I

01) அ)

- 1.1. ம்
- 1.2. கதவு
- 1.3. யாது
- 1.4. வாழ்த்து
- 1.5. படிக்கின்றாள்
- 1.6. தீயை
- 1.7. மாதுளம்பழம்
- 1.8. மரத்தால் விழுந்தான்
- 1.9. முள்ளி
- 1.10. நான்
- 1.11. தானியாகு பெயர்
- 1.12. பார்த்து வைத்திருக்கின்றார்.
- 1.13. கூட்டுப்பெயர்
- 1.14. ஐயம்
- 1.15. நானும் அப்பாவும் நேற்று ஊருக்குப் போயிருந்தோம்.
- 1.16. நான் நண்பனுக்குக் கடிதம் எழுதினேன்.
- 1.17. செய்யும்
- 1.18. கெடுக என் ஆயுள்
- 1.19. பெயரடை
- 1.20. நீங்கல், கருத்தா

**ஆ)**

1) பண்பு உருபு மறைந்து பண்புப் பெயருடன் வேறொரு பெயர்ச்சொல் இணைந்து வருவது

   உ+ம் :- கருந்கூந்தல் வெண்முகில்

2) ஒரு சொல்லின் அமைப்புக்குள் நிகழும் புணர்ச்சி

   நாம் + கள் - நாங்கள்

   ஓடு + இன் + ஆன் - ஓடினான்

3) சொல்லின் முதலிலோ இடையிலோ கடையிலோ கைாரம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது

4) செய்வினை வாக்கியத்தின் செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினை

   உ+ம் :- கோதையால் மாலை கட்டப்பட்டது

5) கருத்தா தானே வினையை நிகழ்த்தாமல் வேறொருவரைக் கொண்டு நிகழ்த்துவது

   உ+ம் :- அவன் பந்தை உருட்டுவித்தான் ($5 \times 2 = 10$ புள்ளிகள்)

02) அ) ஒவ்வொருவரும் தமது அன்றாடப் பிரச்சினைகளை விட சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இன்று உலகளாவிய ரீதியில் சூழல் பிரச்சினையே பாரிய பிரச்சினையாகக் கருதப்படுகிறது. (10 புள்ளிகள்)

The National e-learning portal for General Education

ஆ)

1) கீழைத்தேச நாடுகளில் மக்களாட்சி மலர்ந்துள்ள போதிலும் சர்வாதிகாரப் போக்கும் காணப்படுகிறது. வாழ்வாங்கு வாழும் தூர நோக்குடைய கல்வியால் வாழ்க்கையைச் செம்மையாக்க முடியும்.
2) கல்வியறிவினால் விடுதலை பெற்ற சமூகம் ஒன்றை, மனிதநேய சமூகமொன்றைத் தோற்றுவிப்பதால் வாழ்க்கை முறையைச் செம்மை செய்ய முடியும்.
3) ஆன்மீக விடுதலை மெஞ்ஞான உலகம் ஒன்றே
4) மக்களாட்சி என்ற பெயரில் குடும்ப ஆட்சி, குழுச் சர்வாதிகார ஆட்சி
5) மக்களாட்சி என்ற பெயரில் நல்லாட்சி இடம் பெறுகின்றது. ($5 \times 2 = 10$ புள்ளிகள்)

**03)** பொருட்பொருத்தம் - 08
மொழிச் செம்மை - 06
பந்தி, குறியீடு - 04
முழுமை - 02
மொத்தப் புள்ளிகள் - 20 புள்ளிகள்

## பகுதி - II

### பிரிவு 'அ'

**04)** அ) அறநூல்கள் - 11 அகநூல்கள் - 6
புறநூல்கள் - 1 காவியங்கள் - 2
பக்தியிலக்கியங்கள் - (07 புள்ளிகள்)

ஆ) 1. இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவன் மீது கொண்ட அன்பை ஈடுபாட்டை வெளிப்படுத்தப் பாடியமை.
2. இறைவனுக்கு அகவுருத் தோற்றம் கொடுத்துப் பாடியமை
3. பக்தியுணர்வை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வடிவமாக விருத்தப்பாவை அறிமுகப்படுத்தியமை
4. 'பதிக' வடிவத்தில் அமைந்தமை
5. அந்தாதி வடிவம் கையாளப்பட்டது (4 புள்ளிகள்)

இ) 1. பக்தி என்னும் புதிய பொருள் மரபைக் கையாண்டு பிற்கால பக்தியிலக்கிய எழுச்சிக்கு வழிகாட்டியமை
2. இறைவனுக்கு அகவுருத் தோற்றங் கொடுத்துப் பாடும் மரபை அறிமுகம் செய்தமை
3. 'பதிக' வடிவத்தை முதன்முதலில் கையாண்டமை
4. தமிழில் அந்தாதி வடிவத்தை அறிமுகம் செய்தமை
5. விருத்தப்பாவை அறிமுகம் செய்து வைத்தமை

**05)** அ) முக்கூடற்பள்ளு
திருக்குற்றாலக் குறவஞ்சி
நொண்டி நாடகம்

ஆ) 1. பொதுமக்களின் வாழ்வியற் கோலங்களைப் பாடுதல்
2. சமூக - சமத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துதல்
3. இசைப் பண்பு மிகுந்தவை
4. நாடகப் பண்பு கொண்டவை
5. நகைச் சுவை, சிருங்காரம்
6. நாட்டார் பாடலோசைப் பாங்கு (6 புள்ளிகள்)

இ) பல்வேறு பிரபந்த வடிவங்கள் தோன்றியமை
பரணி, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, மும்மணிக்கோவை, தூது, சதகம், அந்தாதி (5 புள்ளிகள்)

06) அ) 1. உரைநடை
2. புனைகதை
அ. நாவல்
ஆ. சிறுகதை
3. நவீன கவிதை (4 புள்ளிகள்)

ஆ) 1. தமிழ் உரைநடை புத்தூக்கம் பெற்று புதிய எழுச்சியுடனும் வளர்ச்சியுடனும் புதிய பாதையில் பயணித்தமை.
2. 18 ஆம் நூற்றாண்டில் அச்சியந்திர வருகையும் சமயப் பிரசாரங் காரணமாகப் பெருமளவில் பிரசுரங்களும் கண்டனங்களும் வெளிவந்தமை
3. 19 ஆம் நூற்றாண்டிலேயே தமிழ் உரைநடை எழுந்து நடக்கத் தொடங்கியது - பேராசிரியர் க. கைலாசபதி
4. 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயக் கல்வியின் விருத்தி காரணமாகப் புதிய இலக்கிய வடிவங்களின் அறிமுகமும் பத்திரிகைத் துறையின் வளர்ச்சியும்
5. உரைநடையில் அமைந்த பல்வேறு இலக்கிய வடிவங்களின் தோற்றமும் வளர்ச்சியும்
கட்டுரை புனைகதை
ஆராய்ச்சி பத்திரிகைத்துறை
ஒப்பியல் மொழிபெயர்ப்பு
நாடகம் (6 புள்ளிகள்)

இ) 1. சாதாரண மக்களும் கற்றுணரத்தக்கதாக உரைநடையை எளிமைப்படுத்தியமை
2. பண்பட்ட உரைநடை
3. தமிழரின் முதல் அங்கத இலக்கியமான பரமார்த்த குரு கதையை உரைநடை இலக்கிய வடிவமாகத் தந்து தமிழ்க் கதை இலக்கியத்திற்குப் பாதை அமைத்துக் கொடுத்தார்.
4. தமிழ் எழத்துக்களில் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டு இலகுபடுத்தினார்.
5. தமிழில் முதன் முதலில் தோன்றிய சதுரகராதியுடன் ஏனைய பல அகராதிகளையும் தந்தார்.

## பிரிவு ‘ஆ’

07) அ)

| | | |
|---|---|---|
| காவியம் | - | திருச்செல்வர் காவியம் |
| புராணம் | - | சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், பிள்ளையார் கதை, யோசேப்பு புராணம் |
| தூது | - | கிள்ளைவிடு தூது, பஞ்சவண்ணத் தூது |
| அம்மானை | - | திருச்செல்வர் அம்மானை |
| காதல் | - | வெருகல் சித்திர வேலாயுதர் காதல் |
| அந்தாதி | - | கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, புலியூர் யமக அந்தாதி |
| கோவை | - | கரவை வேலன் கோவை |
| பள்ளு | - | பறாளை விநாயகர் பள்ளு<br>தண்டிகைக் கனகராயன் பள்ளு |
| பதிகம் | - | இணுவில் சிவகாமியம்மைப் பதிகம் |
| ஊஞ்சல் | - | வட்டுக்கோட்டை பத்திரகாளி அம்மை ஊஞ்சல் |
| துதி | - | இணுவில் சிவகாமி அம்மை துதி |
| பிள்ளைத் தமிழ் | - | இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ் |
| வரராறு | - | யாழ்ப்பாண வைபவமாலை |
| நாடகம் | - | அலங்கார ரூபன் மலைய நந்தினி<br>அதிரூபாவதி வாளபிமன் நொண்டி நாடகம், அனிருத்தன் நாடகம் |
| விளக்கநூல் | - | காசியாத்திரை விளக்கம் |
| மருத்துவம் | - | அமுதாகரம் |
| சோதிடம் | - | சந்தான தீபிகை |

(8 புள்ளிகள்)

ஆ) 1. கத்தோலிக்க மதம் சார்ந்த நூல்களின் தோற்றம்
2. கத்தோலிக்க மதக் கருத்துக்கள்
3. கத்தோலிக்கப் புனிதரைப் பாடியமை (7 புள்ளிகள்)

08) (15 புள்ளிகள்)